Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 172 | உள்ளூர் - 21.06.2026 | ஞாயிறு | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 172 | வெளியூர் - 22.06.2026 | திங்கள் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

இந்த 4 ராசிகளுக்கு ஜீலை மாதம் வரை தொட்டதெல்லாம் தங்கமாக மாறும்..!

“AIIMS–ல் கொட்டிக்கிடக்கும் 2600 வேலைவாய்ப்புகள்..!

முன்பதிவு டிக்கெட் இல்லாமல் பயணித்தால் ரூ.2,000 அபராதம்!

நடிகை சமந்தா வீட்டில் புதுவரவு...!

# 60 நாட்களுக்கு பின்பு சுங்க கட்டணம்... டிரம்ப் மிரட்டல்!

வாஷிங்டன், ஜூன். 21–

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த பிப்ரவரி இறுதியில் தாக்குதல் நடத்தியது. இதனையடுத்து, ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. உலக நாடுகளுக்கு 5–ல் ஒரு பங்கு சரக்குகளை கொண்டு செல்ல கூடிய முக்கிய பகுதியை ஈரான் கைப்பற்றியதுடன், கப்பல்களுக்கு வரி விதிக்கவும் முடிவு செய்தது உலக நாடுகளை அதிர்ச்சியில் தள்ளியுள்ளது.



இதனால், உலக அளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல நாடுகளில் விலைவாசி உயர்வும் அறிவிக்கப்பட்டது.

இந்த சூழலில், ஈரானுடன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமைதி பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்து வருகிறது. ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றை இறுதி செய்வதற்கான முதல் சுற்று அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், சுவிட்சர்லாந்துக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

அவர், ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் குவாலிபாப், வெளியுறவு துறை மந்திரி அப்பாஸ் அராக்சி மற்றும் மத்திய வங்கி மற்றும் எண்ணெய் அதிகாரிகளை இன்று சந்தித்து பேசவுள்ளார்.

இந்த சூழலில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பேசும்போது, 60 நாட்களில் இறுதி ஒப்பந்தத்திற்கு ஈரான் ஒப்பு கொள்ளாவிட்டால், அதன்பின்னர் ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்கா சுங்க கட்டணம் வசூலிக்கும் என்று டிரம்ப் எச்சரித்து உள்ளார்.

இந்த பணம், மத்திய கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான சேவைக்காக வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். எனினும், லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை தொடர்ந்து நீரிணை மூடப்பட்டு உள்ளது என ஈரான் தெரிவித்து உள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா தவறி விட்டது என ஈரானின் ராணுவ தலைமை தெரிவித்தது. ஆனால், நீரிணை வழியே கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடந்து வருகிறது என்றும் ஈரான் அதனை கட்டுப்படுத்தவில்லை என்றும் அமெரிக்க பாதுகாப்பு படையின் செய்தி தொடர்பாளர் டிம் ஹாக்கின்ஸ் கூறினார். இதன்படி, 1.7 கோடி பேரல்கள் எண்ணெய்யுடன் 55 வணிக கப்பல்கள் நேற்று நீரிணையை கடந்து சென்றுள்ளன என்றும் கூறினார்.

# கொல்கட்டாவில் யோகா செய்த பிரதமர் மோடி!

புதுடெல்லி, ஜூன். 21–

நாடு முழுவதும் 12வது சர்வதேச யோகா தினக் கொண்டாட்டமாக அனைத்து மாநிலங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தது. மேற்கு வங்கம் கொல்கட்டாவில் 35 ஆயிரம் பேருடன் இணைந்து பிரதமர் மோடி யோகா பயிற்சி செய்தார்.



நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: இமயமலை முதல் இந்திய பெருங்கடல் வரையிலும், மேற்குவங்கம் முதல் சவுராஷ்டிரா வரையிலும், நாடு முழுவதும் யோகாவின் ஆற்றல் நிறைந்துள்ளது; யோகா மக்களை ஒன்றிணைக்கிறது. முழு நாடும் உலகமும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதாக தோன்றுகிறது. இதுவே யோகாவின் வலிமை. இந்த சர்வதேச யோகா தினத்தன்று, அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். யோகா தினத்தில், மேற்கொள்ளப்பட்ட தூய்மை திட்டத்திற்காக மேற்குவங்க மக்களை நான் குறிப்பாகப் பாராட்ட விரும்புகிறேன். இது ஒரு அற்புதமான முயற்சி. ஆன்மிக வளம் நிறைந்த மேற்கு வங்க மண்ணில் இந்த நிகழ்வைக் கொண்டாடுவது ஒரு பாக்கியம். மகான்களையும் யோகிகளையும் வளர்த்தெடுத்த அதே மண்ணில் நடைபெற்ற மாபெரும் யோகா தின கொண்டாட்டத்தில் பங்கேற்றது, நல்ல அனுபவமாக இருந்தது.

இந்த யோகா பயிற்சி இனி தனிப்பட்ட நல்வாழ்வுக்கு மட்டும் உரியதல்ல, மனிதகுலத்திற்கு ஆரோக்கியமான மற்றும் நல்லிணக்கமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இது இன்றியமையாததாகிவிட்டது. நவீன சமூகங்கள் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு யோகா தீர்வுகளை வழங்குவதோடு, உடல் தகுதி மற்றும் அமைதி ஆகியவற்றுக்கு இடையே ஒரு பாலமாகவும் செயல்படுகிறது.

யோகாவை ஒரு வருடாந்திர நிகழ்வாகக் கருதாமல், அதை ஒரு வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் தங்களின் 30 வயதில் இருந்ததை விட, 50 வயதில் அதிக உடற்தகுதியுடனும், ஆற்றலுடனும் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

மேற்கு வங்க கவர்னர் ஆர்.என். ரவி மற்றும் முதல்வர் சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் யோகா நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# இந்தியா முழுவதும்

# ‘நீட்’ மறுதேர்வு..! 551 நகரங்கள்

## 22.7 லட்சம் மாணவ–மாணவிகள் எழுதுகின்றனர்!!

சென்னை, ஜூன். 21–

நாடு முழுவதும் 551 நகரங்களில் ‘நீட்’ மறுதேர்வு ஜூன். 21 (இன்று) நடக்கிறது. இந்த தேர்வை 22.7 லட்சத்துக்கும் மேற்பட்டோர் எழுதுகிறார்கள்.





மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கான ‘நீட்’ எனும் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த தேர்வில் மாணவ–மாணவிகள் பெறும் மதிப்பெண் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கை நடக்கிறது. அந்த வகையில் 2026–27–ம் கல்வியாண்டு க்கான மருத்துவப் படிப்புகளுக்கு நீட் நுழைவுத் தேர்வு கடந்த மாதம் (மே) 3–ந்தேதி நாடு முழுவதும் நடைபெற்றது. இந்த தேர்வை சுமார் 22 லட்சம் மாணவ–மாணவிகள் எழுதி இருந்தனர். தேர்வில் வினாத்தாள் கசிவு புகார் எழுந்ததையடுத்து அது விசாரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட நிலையில், நீட் தேர்வை மத்திய அரசு ரத்துசெய்து அறிவிப்பை வெளியிட்டது. அவ்வாறு ரத்து செய்யப்பட்ட ‘நீட்’ மறுதேர்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) நாடு முழுவதும் 551 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 இடங்களிலும் நடைபெற இருக்கிறது. இதற்காக 5 ஆயிரத்து 500–க் கும் மேற்பட்ட மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கை

இந்த தேர்வை கடந்த முறை ரத்து செய்தபோது எழுதி இருந்த மாணவ–மாணவிகளின் எண்ணிக்கையிலேயே இந்த முறையும் எழுதுவார்கள் என சொல்லப்படுகிறது. அதன்படி அவர்களுக்கான ஹால்டிக்கெட் சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. சுமார் 22.7 லட்சத்துக்கும் மேற்பட்டோர் எழுத இருக்கும் இந்த தேர்வில், கடந்த முறை வந்த வினாத்தாள் கசிவு புகார் போல் எந்த முறைகேட்டுக்கும் இடம் இல்லாமல் தேர்வை நடத்தி முடிக்க ஏதுவாக தேர்வை நடத்தக்கூடிய தேசிய தேர்வு முகமை பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை கையில் எடுத்து இருக்கிறது.

**தமிழ்நாட்டில்...**

தேர்வு மையத்துக்குள் பிற்பகல் 1.30 மணிக்கு முன்னதாக தேர்வர்கள் வர அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றனர். அதன்பிறகு வருபவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி மாலை 5.15 மணி வரை தேர்வு நடக்கிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில், 31 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு இருக்கும் 307 தேர்வு மையங்களில் 1 லட்சத்து 42 ஆயிரத்து 489 மாணவ–மாணவிகள் தேர்வை எழுத இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் 43 தேர்வு மையங்கள் அமைக் கப்பட்டு இருக்கின்றன. இங்கு சுமார் 21 ஆயிரம் பேர் எழுத இருப்பதாக சொல்லப்படுகிறது. எந்த முறைகேடுக்கும் இடம் இல்லாமல், தேர்வை சரியாக நடத்தி முடிக்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட கலெக் டர்களுக்கும், தலைமைச்செயலாளர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

கடும் கட்டுப்பாடுகள்

கடந்த முறை தேர்வு ரத்து செய்யப்பட்டதால் இந்த மறுதேர்வுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. வினாத்தாள் தயாரிப்பு பணியில் இருந்த ஒருவர்கூட இன்னும் வெளியே விடப்படவில்லை. ரகசியமாக வைக்கப்பட்டு உள்ளனர். தேர்வை மிகவும் நியாயமான முறையில் நடத்தி முடித்திட தேசிய தேர்வு முகமை விழிப்புடன் பணியாற்றி வருகிறது.

**பேனா தேவையில்லை**

வீட்டில் இருந்து தேர்வுக்கூடத்துக்கு செல்லும்போது ஹால் டிக்கெட், அடையாள அட்டை, 2 பாஸ்போர்ட் அளவு புகைப்ப டங்கள் மற்றும் தண்ணீர் தேவையென்றால் தண்ணீர் பாட்டில் (வெளிப்படையானது) ஆகியவற்றை மட்டும் எடுத்துச் சென்றால் போதுமானது. செல்போன், டேப்லெட் மற்றும் ஸ்மார்ட் கைக்கெடிகாரம் போன்றவை வேண்டாம். செல்போன் எடுத் துச் செல்வதாக இருந்தால் அதை வெளியே யாரிடமாவது கொடுக்க வேண்டும். பேனாகூட எடுத்துச் செல்ல வேண்டாம். தேர்வுக்கான பிரத்யேக பேனா, தேர்வு அறையில் வழங்கப்படும். தேர்வுக்கூடத்தில் கண்காணிப்பாளர் சொல்வதை கவனமாகக் கேட்டு அதன்படி நடப்பது அவசியம். தேர்வு அறையில் யாரிடமும் பேசாமல் இருப்பது நல்லது என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

# மக்கள் போராட்டம் எதிரொலி: பொலிவியாவில் அவசரநிலை பிரகடனம்!

பொலிவியா, ஜூன். 21–

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மக்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலவி வருகிறது.



அரசுக்கு எதிராக பொதுமக்கள் இணைந்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

போராட்டக்காரர்கள் நாட்டின் முக்கிய நெடுஞ்சாலைகளை முழுமையாக முடக்கியதால் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றி வந்த லாரிகள் ஆங்காங்கே ஸ்தம்பித்து நின்றன. இதனால் ஒட்டுமொத்த நாடும் கடும் தட்டுப்பாட்டால் நிலைகுலைந்தது.

இதற்கிடையே, போராட்டக்காரர்களிடம் அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

இந்நிலையில், பொலிவியா அதிபர் ரோட்ரிகோ பாஸ், நாடு முழுவதும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் அவசர நிலையைப் பிரகடனம் செய்வதாக அறிவித்துள்ளார். இந்த அவசர நிலை அடுத்த 90 நாள்களுக்கு அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த எமர்ஜென்சி சாலை மறியல்களை அகற்றி நாட்டின் ஒழுங்கை மீட்டெடுக்க ராணுவத்திற்கு முழு அதிகாரத்தை வழங்குகிறது. வன்முறையில் ஈடுபடுவோர்மீது கடும் சட்ட நடவடிக்கை பாயும் என அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது. எமர்ஜென்சி அமல்படுத்தப்பட்டுள்ளதால் பொலிவியாவில் பரபரப்பு சூழல் நிலவுகிறது.

# கூவம், அடையாறு சீரமைக்க விரிவான செயல் திட்டம்; முதல்வர் விஜய் உத்தரவு!

சென்னை, ஜூன். 21–

கழிவுநீர் பாயும் அளவுக்கு சீரழிந்துள்ள கூவம், அடையாறு ஆகிய நீர் நிலைகளில், நன்னீர் செல்லும் வகையிலான சீரமைப்பு செயல் திட்டத்தை உருவாக்க, முதல்வர் விஜய், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதற்காக ஐ.ஏ.எஸ்., அதிகாரி தலைமையில் கமிட்டி அமைக்கவும் உத்தரவிட்டுள்ளதால், நீர்நிலைகளுக்கு விடியல் வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.



சென்னை நகரின் முக்கிய அடையாளங்களாக கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் உள்ளன. இந்த ஆறுகளை துாய்மைப் படுத்தவும், சுற்றுச்சூழல் ரீதியாக மீட்டெடுக்கவும், தி.மு.க., –– அ.தி.மு.க., அரசுகள் முயன்றன. குறிப்பாக, கூவம் ஆறு சீரமைப்புக்கு, 604.77 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அதில், கூவம் ஆற்றில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, மறுகுடியமர்வு செய்யப்பட்டன.

அதேபோல், தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு, கரையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. ஆனால், விதிமீறி கழிவுநீர் விடுவதை குடிநீர் வடிகால் மற்றும் வழங்கல் வாரியத்தால் தடுக்க முடியவில்லை. நீர்நிலைகளில் குப்பை போடுவதை மாநகராட்சியாலும் தடுக்க முடியவில்லை. இதனால், கூவம் ஆறு தற்போதும் துர்நாற்றம் வீசி வருகிறது. அதேபோல், அடையாறு ஆறு சீரமைப்புக்காக,17,000 கோடி ரூபாய்க்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 4,778.26 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டன. அப்பணிகள், சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டன. தற்போது நீதிமன்றம் வாயிலாக அப்பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. இந்நிலையில், நகராட்சி நிர்வாகத்துறை குறித்த ஆய்வில், சமீபத்தில் பங்கேற்ற முதல்வர் விஜய், சென்னை மாநகரை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில், திட்டம் தயாரிக்க உத்தரவிட்டுள்ளார்.

ஜூன் 22
முதலமைச்சர்
விஜய்
பிறந்த நாள்
சிறப்பு மலர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு வாழ்த்து விளம்பரங்கள் வெளியிட்ப்பட உள்ளன.

விளம்பரக் கட்டணம்

| | கருப்பு & வெள்ளை | கலர் |
|---|---|---|
| கால் பக்கம் | ₹3,000 | ₹5,000 |
| அரை பக்கம் | ₹8,000 | ₹10,000 |

தங்களின் வாழ்த்து விளம்பரங்களை முன்பதிவு செய்து வெளியிட சிறந்த வாய்ப்பு.

விளம்பரப் பிரிவு 7904806432
முன்பதிவு அவசியம்

த தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 21.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 07-ம் தேதி

# அமெரிக்கா – ஈரான் போட்ட ரகசிய டீல்! பெட்ரோல் விலை மீண்டும் ஏறப்போகிறதா?




சமீபகாலமாக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நிலவும் போர் குறித்து பலருக்கும் தெரியும். இந்த போர் பதற்றத்தின் காரணமாக ஈரான் முக்கிய கடல் வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை மூடி வைத்ததாக செய்திகள் பரவியது. இந்த வழித்தடம் மிகவும் முக்கியமான வழித்தடம். ஏனென்றால் உலக நாடுகளுக்கு தேவையான கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு போன்றவற்றில் ஐந்தில் ஒரு பங்கு.. இந்த ஒரு வழியாகத்தான் பிற நாடுகளுக்கு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு முக்கியமான வழித்தடம் மூடப்பட்டால் தொடர்ந்து அங்கிருந்து வரும் பொருட்களின் விலை அதிகரிக்கும். ஈரான் இந்த வழித்தடத்தை மூடியதாக வெளியான செய்தியால் உலக நாடுகள் பதறிப் போயின. ஆனால் அதெல்லாம் வெறும் வதந்தி தான் என்று அதிகாரப்பூர்வமாக ஈரான் விளக்கம் அளித்துள்ளது.

க்ஷ இந்தச் செய்தி உண்மையிலேயே உலக நாடுகளை நிம்மதி பெருமூச்சு விட வைத்துள்ளது. ஏனெனில் இந்த வழித்தடம் மூடப்பட்டால் கச்சா எண்ணெயின் வரத்து குறையும். இதனால் பெட்ரோல், டீசல் மற்றும் எரிபொருளின் விலை அதிகரிக்கும். உலக நாடுகளுக்கு மட்டுமின்றி இந்த செய்தி வெளியானதிலிருந்து சாமானியர்களும் அதிர்ச்சிக்குள்ளாகினர். இதற்கு முன்னர் உண்மையிலேயே ஈரான் இந்த வழித்தடத்தை மூடி தான் வைத்திருந்தது. ஆனால் தற்போது பரவி வரும் செய்தி உண்மை இல்லை என்று ஈரான் அரசுக்கு சொந்தமான பிரஸ் டிவி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. கப்பல் போக்குவரத்து வழக்கம் போல நடைபெற்று வருவதாக அந்நாட்டின் வெளியுறவு செய்தி தொடர்பாளர் இஸ்மாயில் பாகாய் தெரிவித்திருக்கிறார். இந்த முடிவுக்கு முக்கிய காரணம் ஜூன் 18–ஆம் தேதி இன்று அமெரிக்கா ஈரான் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதனால் ஹார்முஸ் வழித்தடம் வழியாக பாதுகாப்பான போக்குவரத்தை கொண்டு வருவதற்காக ஈரான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இஸ்மாயில் கூறியுள்ளார். அமைதி ஒப்பந்தம் போடப்பட்ட 2 நாட்களுக்குப் பிறகு அமெரிக்கா ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக கூறி, ஈரான் இஸ்லாமிய காவற்படைக்கு ஹார்முஸ் ஜலசந்தியை மூடுமாறு உத்தரவிட்டதாகவும் சில ஊடகங்களில் செய்திகள் வெளியானது. ஆனால் இந்த தகவல் உண்மை இல்லை என்று ஈரான் மறுத்திருக்கிறது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் ஆகியோர் டிஜிட்டல் முறையில் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். மேலும் ஒப்பந்தத்தில் ஹார்மோஸ் வழித்தடத்தை பயன்படுத்துவது தொடர்பான புதிய விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் கையெழுத்தான தேதி முதல் 60 நாட்கள் வரை பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வழியாக பயணிக்கும் கப்பல்கள் கட்டணம் இன்றி செல்லலாம். இதன் காரணமாக ஈரான் இந்த கடல் பகுதியில் வைத்திருந்த கடல் கன்னி வெடிகளை அகற்றும் பணியையடுத்த 30 நாட்களுக்குள் முழுமையாக முடிக்க இருக்கிறது. மேலும் எதிர்காலத்தில் இந்த பாதை வழியாக எப்படி போக்குவரத்து நடைபெற வேண்டும் என்பதற்கான சட்டங்கள் குறித்து ஈரான், ஓமன் மற்றும் வளைகுடா நாடுகள் இணைந்து ஆலோசிக்க உள்ளது. பாதை மூடப்படவில்லை என்பது தெளிவாகிறது இருந்தாலும்.. ஈரான் இனி இந்த வழித்தடத்தை பயன்படுத்த புதிய விதியை கொண்டு வரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஹார்முஸ் பாதையை கடக்க விரும்பும் அனைத்து கப்பல்களும் 48 மணி நேரத்திற்கு முன்பே பயண விபரங்கள் தொடர்பான தெரிவிக்க வேண்டும்.டு முக்கியமாக இந்த வழித்தடத்தின் மூலம் அதிக அளவிலான போக்குவரத்து நடைபெறுவதால் தாமதங்களை தவிர்ப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# அரிசி விலை கிலோவுக்கு ரூ.5 உயர்வு!

சென்னை, ஜூன். 21–
கர்நாடகா, ஆந்திராவில் இருந்து வரத்து குறைந்துள்ளதால், தமிழகத்தில் சன்னரக அரிசி விலை, கிலோவுக்கு, ரூ ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், மோட்டா ரக அரிசிக்கான நெல் அதிகளவில் விளைகிறது. இதை, பொது வினியோக திட்டத்திற்காக, அரசு கொள்முதல் செய்கிறது. சன்னரக அரிசி விளைச்சல் குறைவு.

தமிழக அரிசி தேவை ஆண்டுக்கு 91 லட்சம் டன். அரிசி உற்பத்தி, 75 லட்சம் டன். இதில், 5 லட்சம் டன் கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. எனவே, தமிழகத்தில் அரிசி பற்றாக்குறை, 21 லட்சம் டன்னாக உள்ளது. இதற்காக ஆண்டுக்கு, 30 லட்சம் டன் உயர் ரக சன்ன அரிசி, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வருகிறது. கர்நாடகாவில் சில இடங்களில் போதிய மழை பெய்யாததால், உயர் ரக சன்ன நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் வரத்து குறைந்துள்ளதால், தற்போது, தமிழகத்தில் அந்த அரிசி விலை உயர்ந்துள்ளது.

# அகவிலைப்படி, ஊதிய உயர்வு; அரசு ஊழியர்களுக்கு ஜாக்பாட்..!




புதுடெல்லி, ஜூன். 21–
8–வது மத்திய ஊதியக் குழுவின் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. அக்டோபர் 2025–ல் மத்திய அரசு இதற்கான விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்ததிலிருந்து ஏறக்குறைய எட்டு மாதங்கள் கடந்துவிட்டன.

சுமார் 55 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் 69 லட்சம் ஓய்வூதியதாரர்களுக்கான ஊதியம், ஓய்வூதியம் மற்றும் படிகள் தொடர்பான திருத்தங்கள் குறித்து இக்குழு முக்கிய பரிந்துரைகளை வழங்கவுள்ளது. தற்போது, மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி (DA) 60 சதவீதமாக உள்ளது. ஜனவரி 2026 முதல் அமலுக்கு வரும் வகையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 2 சதவீத அகவிலைப்படி உயர்வை மத்திய அரசு அறிவித்திருந்தது.

வழக்கமாக ஆண்டுக்கு இரண்டு தவணைகளில் அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் மத்திய அரசு, ஜூலை 2026–க்கான இரண்டாவது தவணை உயர்வை செப்டம்பர் மாதத்தில் அறிவிக்க வாய்ப்புள்ளதாகத் தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். சில சூழல்களில், இந்த அறிவிப்பு அக்டோபர் மாதம் வரை தாமதமாகலாம்.

தொழிலாளர் நலத்துறை வெளியிடும் ‘தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டின்’ (AICPI–IW) அடிப்படையில் அகவிலைப்படி குறித்த முடிவு எடுக்கப்படுகிறது. இந்தக் குறியீடு ஏப்ரல் 2026–ல் 149.9 புள்ளிகளை எட்டியது. மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான தரவுகளின் அடிப்படையில் ஜூலை 2026–க்கான அகவிலைப்படி உயர்வு சதவீதம் இறுதி செய்யப்படும்.

இதனிடையே, 8–வது ஊதியக் குழுவிடம் ஆலோசனைகள் மற்றும் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதியாக ஜூன் 15, 2026–ஐ மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. ஊழியர் சங்கங்கள், ஓய்வூதியதாரர் சங்கங்கள் மற்றும் பல்வேறு துறைகளின் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகளை ஏற்கனவே குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பல்வேறு மாநிலங்களில் உள்ள ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினரை நேரடியாகச் சந்தித்து 8–வது ஊதியக் குழு கருத்துகளைக் கேட்டு வருகிறது. இக்குழு லக்னோவில் ஜூன் 22–23 தேதிகளிலும், புவனேஸ்வரில் ஜூலை 6–7 தேதிகளிலும், கொல்கத்தாவில் ஜூலை 9–10 தேதிகளிலும் கூட்டங்களை நடத்தவுள்ளது.

டெல்லி, லடாக், ஜம்மு–காஷ்மீர், ஹைதராபாத், தெலுங்கானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆலோசனைகளை நிறைவு செய்துள்ளது. ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்ட பிறகு, இறுதிப் பரிந்துரைகளை உருவாக்கும் பணி துரிதப்படுத்தப்படும் என்று குழுவின் வட்டாரங்கள் தெரிவித்தன. 8–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்தால், மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூ தியத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு இருக்கும் என்று ஊழியர் சங்கங்கள் நம்பிக்கை கொண்டுள்ளன.

# முதல்-அமைச்சராக ‘முதல்’ பிறந்தநாளை கொண்டாடும் விஜய்..!



சென்னை, ஜூன். 21–
தமிழக முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற பின் தனது முதல் பிறந்தநாளை நாளை (ஜூன் 22ம் தேதி) கொண்டாட உள்ளார் விஜய். அவரது பிறந்தநாள் கொண்டாட்டத்தை இப்போதே அவரது கட்சியினர் கொண்டாட ஆரம்பித்துவிட்டனர்.

தமிழ் திரையுலகின் உச்ச நடிகராக வலம் வந்த விஜய் கடந்த 2024–ம் ஆண்டு பிப்ரவரி 2–ந்தேதி ஒற்றை அறிக்கை மூலம் அரசியல் கட்சி தொடங்குவதாக அறிவித்தார். தனது கட்சிக்கு தமிழக வெற்றிக்கழகம் என்று பெயர் சூட்டினார்.

விக்கிரவாண்டியில் முதல் மாநாட்டையும், மதுரையில் 2–வது மாநாட்டையும் நடத்தி தமிழக அரசியலை அதிர செய்தார். லட்சக்கணக்கான மக்கள் கூடிய அந்த மாநாடுகளை இந்தியாவே உற்று நோக்கியது. அரசியலில் ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்த விஜய், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அம்பேத்கர், வீரமங்கை வேலு நாச்சியார், அஞ்சலையம்மாளை கொள்கை தலைவர்களாக அறிவித்தார்.

கட்சி தொடங்கி 2 ஆண்டுகளிலேயே சட்டசபை பொதுதேர்தலை த.வெ.க. எதிர்கொண்டது. விசில் சின்னத்துடன் கூட்டணியின்றி மக்களை சந்தித்த விஜய், ‘உங்களுக்காக எல்லாவற்றையும் விட்டு வந்திருக்கிறேன், எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்’ என்று பிரசாரம் மேற்கொண்டார். அவரின் பிரசாரம் மக்கள் மனதை தொட்டது. அவர் பிரசாரத்திற்கு சென்ற, செல்லாத இடங்களிலும் ‘விசில்’ சத்தம் தெறிக்க விட்டது. திரையில் மட்டுமல்ல. தேர்தலிலும் விஜய் ‘சர்க்கார்’ அமைய மக்கள் அமோக ஆதரவு அளித்தனர். ‘உச்ச நடிகர்’ என்ற அடையாளத்தை தாண்டி தமிழக முதல்–அமைச்சர் விஜய் என்று வரலாறு உச்சரிக்க தொடங்கியது. மே 10–ந்தேதி ஆட்சி பொறுப்பேற்று, ஒரு மாதத்தை நிறைவு செய்து இருக்கும் முதல்–அமைச்சர் விஜய்க்கு ஜூன். 22 (திங்கட்கிழமை) 52–வது பிறந்தநாள்.

இதுவரை, நடிகராக பிறந்தநாளை கொண்டாடிய விஜய் முதல்–அமைச்சராக தனது ‘முதல்’ பிறந்தநாளை கொண்டாட இருக்கிறார். இது அவரது ரசிகர்களையும், தொண்டர்களையும் உற்சாகப்படுத்தி உள்ளது. தற்போது, சட்டசபை கூட்டத்தொடர் நடக்கும் நிலையில், சட்டசபையில் நாளை அவருக்கு சபாநாயகர், அமைச்சர்கள், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாழ்த்து கூற இருக்கிறார்கள்.

முதல் – அமைச்சராக பிறந்தநாளை கொண்டாடும் விஜய் சட்டசபையில் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

முதல் – அமைச்சர் விஜய்யின் பிறந்தநாளையொட்டி தமிழகம் முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கோவில்களில் சிறப்பு பூஜைகள், அன்னதானம், நல உதவிகள் வழங்க த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள்.

# மின்சாரத்துறை சார்பில் அடுத்த வாரம் வெள்ளை அறிக்கை - அமைச்சர் நிர்மல்குமார்!



மதுரை, ஜூன். 21–
மின்சாரத்துறையில் நடந்த ஊழல், நஷ்டம் குறித்து அடுத்த வாரம் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று அமைச்சர் நிர்மல்குமார் கூறினார்.

முதல்–அமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, மாநில அளவிலான கபடி போட்டி மதுரை அவனியாபுரம் பகுதியில் நடைபெற்றது. இதனை அமைச்சர் நிர்மல்குமார் தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

கடந்த 5 ஆண்டுகளில் மின்சாரத்துறையில் ஏராளமான முறைகேடுகள் நடந்துள்ளன. அந்த முறைகேடுகள் குறித்து முதல்–அமைச்சரின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முந்தைய ஆட்சியில் நடந்த அனைத்து ஊழல்களும் உடைக்கப்பட்டுள்ளன. வெளிப்படை தன்மையுடன் ஒரு அமைப்பை விரைவில் அறிமுகப்படுத்த இருக்கிறோம்.

நெல்லை, உடுமலைப்பேட்டை பகுதியில் மின்சாரத்துறையில் பெரும்பாலான புரோக்கர்கள் செயல்பட்டார்கள். அதை முழுவதுமாக கண்டறிந்து முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வெளிப்படையான ஒரு போர்டல் அடுத்த 10 நாட்களில் உருவாக்கப்பட உள்ளது. இனி யாரும் ஒரு மெகாவெட் மின்சாரத்திற்கு ரூ.25 லட்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. மின்சாரத்துறை தரப்பில் அடுத்த வாரம் இறுதிக்குள் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும். இந்த துறையின் நிலை என்ன?. எந்தெந்த வகையில் நஷ்டம் ஏற்பட்டது?. எந்தெந்த இடங்களில் ஊழல் நடந்தது? என்பதை அதில் வெளியிடுவோம்.

டிரான்ஸ்பார்மர் ஊழல் வழக்கில், சி.பி.ஐ. விரைந்து கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு பணத்தை திருடியவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். மத்திய அரசு தி.மு.க.வுடன் இணக்கமாக இருக்கும் காரணத்தால் செந்தில் பாலாஜி உள்ளிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி கவர்னருக்கு அனுப்பினோம். ஆனால் கவர்னர் அலுவலகத்தில் அதற்கான அனுமதி அளிக்காதது சந்தேகத்தை கிளப்புகிறது. மேலும் சி.பி.ஐ.யும், தி.மு.க.வும் மறைமுகமாக இணைந்து செயல் படுகிறார்களா? என்ற சந்தேகமும் உள்ளது. இந்த விவகாரத்தை பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் 29-ந்தேதி முப்பழம் பூஜை!



திருப்பரங்குன்றம், ஜூன். 21–
திருப்பரங்குன்றம் முருகன் கோவில் ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் 10 நாட்கள் ஆனி ஊஞ்சல் உற்சவ விழா விமர்ச்சியாக நடைபெறும். இந்த ஆண்டிற்கான ஆனி ஊஞ்சல் உற்சவ விழா நேற்று தொடங்கியது.

இந்த திருவிழா வருகிற 29–ந்தேதி வரை தொடர்ந்து நடக்கிறது. திருவிழாவையொட்டி கோவிலுக்குள் உள்ள திருவாட்சி மண்டபத்தில் ஊஞ்சல் அலங்கரிக்கப்பட்டு தயாராக இருந்தது. உற்சவர் சன்னதியில் இருந்து மேளதாளங்கள் முழங்க தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமி புறப்பட்டு திருவாட்சி மண்டபத்தை வலம் வந்து ஊஞ்சலில் அமர்ந்து ஊஞ்சலாடியபடி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதே போல வருகிற 29–ந்தேதி வரை தினமும் உற்சவர் சன்னதியில் இருந்து சுப்பிரமணிய சுவாமி தெய்வானை அம்பாளுடன் புறப்பட்டு திருவாச்சி மண்டபத்தில் எழுந்தருளி ஊஞ்சலாடும் நிகழ்ச்சி நடக்கிறது.

திருவிழாவின் உச்ச நிகழ்ச்சியாக வருகிற 29–ந் தேதி முப்பழ பூஜை நடக்கிறது. இதனையொட்டி கோவிலின் கருவறையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி, கற்பக விநாயகர், துர்க்கை அம்பாள், சத்திய கீரிசுவரர், பவளக்கனி வாய்பெருமாள் ஆகிய 5 சன்னதியிலும் பகல் 12 மணிக்கு உச்சிகாலத்தில் வாழை, மா, பலா, ஆகிய முப்பழங்கள் படைக்கப்பட்டு விசேஷ பூஜையும் மகாதீப, தூப ஆராதனையும் நடக்கிறது. மற்ற சன்னதிகளிலும் சுவாமி–அம்பாளுக்கு முப்பழம் படையல் பூஜை நடக்கிறது. விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் செய்து வருகிறது.



# ஜூலை மாதம் வரை ராஜயோகம்.. இந்த 4 ராசிகள் தொட்டதெல்லாம் தங்கமாக மாறும்..!




ஜோதிடத்தின்படி, ஜூலை மாதத்தில் சுமார் ஐந்து கிரகங்கள் தங்கள் நிலைகளை மாற்றிக்கொள்கின்றன. இது பன்னிரு ராசிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்; குறிப்பாக நான்கு ராசிக்காரர்களுக்கு இது பல வகைகளில் சாதகமாக அமைந்து, எல்லா திசைகளிலிருந்தும் மங்களகரமான பலன்களையும் அற்புதமான நன்மைகளையும் கொண்டுவரும்.


ஜூலை மாதத்தில் சுக்கிரன், புதன், சூரியன் மற்றும் சனி ஆகிய கிரகங்கள் தங்கள் நிலையை மாற்றுகின்றன. இதனால், நான்கு ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் வரை சிறப்பான ‘ராஜ யோகம்’ அமையும். அந்த ராசிகள் எவை என்று இப்போது பார்ப்போம்.

**ரிஷபம்:** நான்கு கிரகங்களின் சேர்க்கையால் ரிஷப ராசிக்காரர்களுக்கு அற்புதமான பலன்கள் கிடைக்கும். அதுமட்டுமின்றி, இந்த மாதம் முழுவதும் அவர்களுக்கு மிகவும் சிறப்பாக அமையும். புதிய வீடு அல்லது நிலம் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது. காரியங்கள் அனைத்தும் கைகூடி வரும். வருமானம் இரட்டிப்பாகும்.

**மிதுனம்:** மிதுன ராசிக்காரர்களுக்கு இது மிகச் சிறந்த காலகட்டம். அவர்கள் தங்கள் பணிகளைச் சரியான நேரத்தில் முடிப்பார்கள். மேலும், அவர்கள் செய்யும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெறுவார்கள். ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்வார்கள். பணியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

**சிம்மம்:** சிம்ம ராசிக்காரர்களுக்கு இது மிகவும் சாதகமான நேரம். காதலில் இருப்பவர்கள் தங்கள் பெரியோர்களைச் சம்மதிக்க வைத்துத் திருமணம் செய்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது. குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவிடுவார்கள். வாழ்க்கையில் முக்கிய முடிவுகளை எடுக்க இது ஏற்ற தருணம்.

**துலாம்:** துலாம் ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் மிகவும் சிறப்பாக அமையும். அவர்கள் தங்கள் பணிகளைச் சரியான நேரத்தில் முடிப்பார்கள். வருமானம் இரட்டிப்பாகும். நீண்ட நாட்களாகத் தள்ளிப்போடப்பட்ட பணிகளைச் செய்து முடிக்க இது மிகச் சிறந்த நேரம். பணம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த விஷயங்களில் அனைத்தும் சாதகமாக அமையும்.



## சினிமா துளிகள்..!

# நடிகை சமந்தா வீட்டில் புதுவரவு...!



சமந்தா மற்றும் ராஜ் நிடிமோரு தம்பதியினர், 2025 டிசம்பர் 1 அன்று கோயம்புத்தூரில் எளிமையான முறையில் திருமணம் செய்துகொண்டனர்.

இதையடுத்து நடிகை சமந்தா ரூத் பிரபு கதாநாயகியாக நடித்த தெலுங்கு படமான ‘மா இண்டி பங்காரம்’ நேற்று உலகெங்கிலும் வெளியானது.

இந்த படம் வெளியாகி வணிக ரீதியில் பெரும் வெற்றி பெற்று ரூ.12.80 கோடிக்கு மேல் வசூல் சாதனை படைத்தது.

இந்நிலையில் மா இண்டி பங்காரம் திரைப்படம் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் வகையில், படக்குழுவினருடன் இணைந்து சமந்தா கேக் வெட்டி கொண்டாடினார்.

**நடிகை சமந்தா கர்ப்பம்:**

அப்போது அந்த நிகழ்வில் சமந்தா ஒரு சாதாரண வெள்ளை டி–ஷர்ட்டில் வயிறு சற்று பெரிதாக இருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியானது. இதனைத் தொடர்ந்து அவர் கர்ப்பமாக இருக்கலாம் என்ற செய்தி வைரலாக பரவியது.

இந்த தம்பதிகள் சமீபத்தில் திருமலை கோவிலுக்கு சென்றபோது, சமந்தாவை அவரின் கணவர் கூட்டத்தில் இருந்து பாதுகாத்த காணொளிகள், யூகங்களுக்கு மேலும் வலு சேர்த்தது.

இந்நிலையில் நடிகை சமந்தாவின் கர்ப்பம் குறித்த செய்தி உண்மைதான் என அவரது செய்தி தொடர்பாளர் உறுதிப்படுத்தி உள்ளார். இந்த ஆண்டு டிசம்பரில் தம்பதியினருக்கு குழந்தை பிறக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.




## அரிசியை ஊறவைக்காமலே சமைக்கிறீங்களா?




பரபரப்பான வாழ்க்கையில், பலர் சமையலை விரைவாக முடிக்க விரும்புகிறார்கள். அரிசியை ஒருமுறை கழுவிவிட்டு, நேரடியாக குக்கர் அல்லது ரைஸ் குக்கரில் சமைப்பது வழக்கமாகிவிட்டது. இருப்பினும், நம் முன்னோர்கள் பின்பற்றிய ஒரு சிறிய பழக்கம் அதாவது அரிசியை சிறிது நேரம் ஊறவைத்து சமைப்பது பல ஆரோக்கிய நன்மைகளைத் தருவதாக ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

பாரம்பரியமாக, பலர் அரிசியை சமைப்பதற்கு முன் 20 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை ஊறவைக்கிறார்கள். இந்த முறை சமையல் நேரத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல், அரிசியில் உள்ள சில சத்துக்களை உடல் சிறப்பாக உறிஞ்சவும் உதவுகிறது. இந்த முறைக்கு சில ஆரோக்கிய நன்மைகள் இருப்பதாக நவீன ஆராய்ச்சிகளும் தெரிவிக்கின்றன.

சத்துக்களை உறிஞ்சும் திறனை மேம்படுத்துகிறது: அரிசியில் இயற்கையாகவே ''பைடிக் அமிலம்'' (Phytic Acid) என்ற பொருள் உள்ளது. இது இரும்பு, துத்தநாகம் (zinc), கால்சியம் மற்றும் மெக்னீசியம் போன்ற முக்கியமான தாதுக்களை உடல் முழுமையாக உறிஞ்சுவதைத் தடுக்கக்கூடும். அரிசியை சிறிது நேரம் தண்ணீரில் ஊறவைப்பது பைடிக் அமிலத்தின் தாக்கத்தைக் குறைக்கலாம். இதனால் உடல் இந்தத் தாதுக்களை மிகவும் திறமையாகப் பயன்படுத்த முடிகிறது.

செரிமானத்திற்கு நல்லது: அரிசியை ஊறவைக்கும்போது, அதில் உள்ள சில இயற்கையான என்சைம்கள் (நொதிகள்) செயல்படத் தொடங்குகின்றன. இவை மாவுச்சத்தை (starch) உடைக்கும் செயல்முறையைத் தொடங்க உதவுகின்றன. இதன் விளைவாக, அரிசி எளிதில் செரிமானமாகக்கூடியதாக மாறுகிறது. இது அடிக்கடி அஜீரணம், வயிறு உப்புசம் மற்றும் வாயுத் தொல்லையால் அவதிப்படுபவர்களுக்குச் சற்று நிவாரணம் அளிக்கலாம்.

குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது: எளிதில் செரிமானமாகும் உணவு குடலின் மீதான கூடுதல் அழுத்தத்தைக் குறைக்கிறது. இது செரிமான மண்டலம் சீராகச் செயல்பட உதவுகிறது. குடல் ஆரோக்கியமாக இருந்தால், நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் சத்துக்களை உறிஞ்சும் திறன் ஆகியவையும் மேம்படுகின்றன.

அரிசி மென்மையாகவும் சுவையாகவும் வேகும்: ஊறவைத்த அரிசி சீராகவும் மென்மையாகவும் வேகும். இது குறிப்பாக புலாவ் மற்றும் பிரியாணி போன்ற உணவுகளுக்கு மிகவும் ஏற்றது; ஏனெனில் இது அரிசி மணிகள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்தனியாகவும் அழகாகவும் வேக உதவுகிறது. சில ஆய்வுகளின்படி, அரிசியை ஊறவைத்து சமைப்பது அதன் செரிமானத் தன்மையில் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

இது ரத்தத்தில் சர்க்கரை அளவு வேகமாக உயர்வதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இருப்பினும், இது நீரிழிவு நோய்க்கான தீர்வு அல்ல. நீரிழிவு நோயாளிகள் மருத்துவர்கள் அல்லது ஊட்டச்சத்து நிபுணர்கள் பரிந்துரைக்கும் உணவு முறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

எவ்வளவு நேரம் ஊறவைக்க வேண்டும்? சாதாரண வெள்ளை அரிசியை 20 முதல் 30 நிமிடங்கள் வரை ஊறவைப்பதே போதுமானது. கைக்குத்தல் அரிசி (brown rice) அல்லது கடினமான அரிசி வகைகளை 1 முதல் 2 மணி நேரம் வரை ஊறவைக்கலாம். ஆனால், அதிக நேரம் ஊறவைப்பது அதன் சுவையையும் தரத்தையும் பாதிக்கக்கூடும்.

# உடல் நலனுக்கு தீங்கு: 16 வகை கூட்டு மருந்துகளுக்கு மத்திய அரசு தடை!



புதுடெல்லி, ஜூன். 21–

மருத்துவத்துறையில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட மருந்துகளை குறிப்பிட்ட விகிதத்தில் சேர்த்து தயாரிக்கப்படும் மருந்துகள் நிலையான அளவு கூட்டு மருந்துகள் (மருந்து கலவைகள்) என அழைக்கப்படுகின்றன. இந்த கூட்டு மருந்துகளின் பயன்பாடு மற்றும் திறன் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யுமாறு மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு அறிவுறுத்தி இருந்தது. அதன்படி மத்திய மருந்துகள் தொழில்நுட்ப ஆலோசனை வாரியம் இதற்காக சிறப்பு நிபுணர் குழுவை அமைத்தது.இந்த குழுவினர் மேற்படி மருந்து கலவைகளை ஆய்வு செய்தது. அப்போது அவற்றில் சில வகை மருந்துகள் பயன்பாட்டுக்கு முரணாக, உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவையாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து 16 வகையான கூட்டு மருந்துகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இந்த மருந்துகளை தயாரித்தல், விற்பனை, வினியோகம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.நாடு முழுவதும் இந்த தடை உடனடியாக அமலுக்கு வருவதாக கூறியுள்ள சுகாதார அமைச்சகம், பயனுள்ள மற்றும் அறிவியல் பூர்வமாகச் சரிபார்க்கப்பட்ட மருந்துகள் மட்டுமே பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.இந்த கூட்டு மருந்துகள் சிகிச்சைக்கான நியாயப்படுத்தலைக் கொண்டிருக்கவில்லை என்றும், அவற்றில் உள்ள அபாயங்களைக் கருத்தில் கொண்டு பயனுள்ளதாகக் கருதப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டிருப்பதாகவும் அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

தடை செய்யப்பட்ட இந்த மருந்துக் கலவைகளில், தோல் மருத்துவத் தயாரிப்புகள், வலிநிவாரணிகள் மற்றும் தசைத் தளர்வு மருந்துகள், மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பி அடிப்படையிலான கலவைகள் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்டுள்ள மருந்துகளில் அசிட்டைல் சாலிசிலிக் அமிலத்துடன் கூடிய எத்தோஹெப்டசைன் கலவை, டைசைக்ளாமைன்–பாராசிட்டமால்–சிலிடினியம் புரோமைடு கலவை, டைசைக்ளோமைன்–பாராசிட்டமால்–சிலிடினியம் புரோமைடு–குளோர்டியாசெபாக்சைடு கலவை, குரோமியம் பிக்கோலினேட்–கிளைக்லாசைடு கலவை மற்றும் பாராசிட்டமால்–லிக்னோகைன் போன்ற கூட்டு மருந்துகள் முக்கியமானவை ஆகும். மேலும் பல்வேறு ஆன்டிபயாடிக் அடிப்படையிலான கலவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அமாக்சிலின்–செராட்டியோபெப்டிடேஸ், அமாக்சிலின்–செராட்டியோபெப்டிடேஸ்–லாக்டோபேசிலஸ் ஸ்போரோஜென்ஸ், அமாக்சிலின்–குளோக்சாசிலின், லாக்டிக் அமிலம் பேசில்லஸ்–செராட்டியோபெப்டிடேஸ் போன்றவை முக்கியமானவை ஆகும்.

தடை செய்யப்பட்ட கூட்டு மருந்துகள் பட்டியலில் பல்வேறு தோல் மருத்துவ மற்றும் சரும பராமரிப்பு கலவைகளும் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வைட்டமின் இ, ஜோஜோபா எண்ணெய், ஆரஞ்சு எண்ணெய், கோதுமை முளை எண்ணெய், டீ ட்ரீ எண்ணெய், அலன்டோயின் மற்றும் டி–பாந்தெனோல் போன்ற மூலப்பொருட்களுடன் கூடிய கற்றாழை அல்லது கற்றாழைச் சாறு போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. அரசின் இந்த அறிவிப்பை அனைத்து மாநில மருந்து கட்டுப்பாட்டாளர்கள், ஒழுங்குமுறை ஆணையங்கள் மற்றும் அமலாக்க முகமைகள் கடுமையாகச் செயல்படுத்துவதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

# ரூ. 440 கோடி இருப்புள்ள மம்தா கட்சியின் வங்கிக் கணக்குகள் முடக்கம்!



மேற்கு வங்காளம், ஜூன். 21–

மேற்கு வங்காள சட்டசபை தேர்தலில் தோல்வி அடைந்த திரிணாமுல் காங்கிரஸ் பெரும் பிளவை சந்தித்து வருகிறது. நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றத்திலும் கட்சியினர் இரு பிரிவாக பிரிந்துள்ளனர். கட்சியில் பெரும் உட்கட்சிப்பூசல் வெடித்துள்ள நிலையில், திரிணாமுல் காங்கிரசின் நிதியை கையாளுவதில் போட்டி ஏற்பட்டு உள்ளது.

தனியார் வங்கியில் கட்சியின் பெயரில் உள்ள 3 கணக்குகளில் ரூ.440 கோடி பணம் உள்ளது. இந்த கணக்குகளை தங்கள் கட்டுப்பாட்டில் எடுக்க கட்சியின் அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் முடிவு செய்துள்ளனர். அதன்படி அந்த கட்சியை சேர்ந்த 10 எம்.எல்.ஏ.க்கள் சைபர் பிரிவு போலீசாரிடம் புகார் மனு ஒன்றை அளித்தனர். அதன்பேரில் இந்த விவகாரத்தில் வழக்குப்பதிவு செய்து, அந்த பணம் எங்கிருந்து வந்தது? எனவும். அதன் பரிமாற்றங்கள் குறித்தும் விசாரணை நடத்து மாறு அதில் கூறியிருந்தனர்.

இதைத்தொடர்ந்து அந்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அதற்காக இந்த 3 வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டு உள்ளதாக போலீசார் தெரிவித்தனர். எனினும் கணக்கில் இருந்து பணம் எடுப்பது மட்டுமே தடை செய்யப்பட்டு உள்ளதாகவும், பணம் செலுத்துவதற்கு எந்த தடையும் இல்லை என்றும் அவர்கள் கூறினர்.

முன்னதாக கட்சியின் முன்னாள் மந்திரியும், அதிருப்தி அணியில் இணைந்து இருப்பவருமான அரூப் பிஸ்வாஸ் சமீபத்தில் வங்கிக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். கட்சியின் பொருளாளராக இருந்த அவர் அனுப்பிய அந்த கடிதத்தில், கட்சிக்குள் எழுந்துள்ள உட்கட்சி பூசல் முடிவுக்கு வரும் வரை வங்கிக்கணக்குகளை முடக்கி வைக்குமாறு அறிவுறுத்தி இருந்தார்.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்த வங்கிக்கணக்கு முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் கடந்த 5–ந்தேதி நடந்த கட்சியின் செயற்குழுவிலேயே, கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அரூப் பிஸ்வாஸ்நீக்கப்பட்டதாகவும், அவருக்குப்பதிலாக சுபாசிஷ் சக்கரவர்த்தி பொருளாளராக நியமிக்கப்பட்டு உள்ளதாகவும் மம்தா பானர்ஜி ஆதரவு எம்.எல்.ஏ. குணால் கோஷ் தெரிவித்து உள்ளார்.

எனவே கட்சியின் நிதி தொடர்பாக பேசுவதற்கு அரூப் பிஸ்வாசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# பாஜ.,வின் அடுத்த இலக்கு பஞ்சாப்!



புதுடில்லி, ஜூன். 21–

டில்லியை ஆம் ஆத்மியிடமிருந்து கைப்பற்றி, பா.ஜ.,வின் ரேகா குப்தா முதல்வராக உள்ளார். ஒடிஷாவில் நவீன் பட்நாயக்கை தோற்கடித்து, பா.ஜ., வெற்றி; அசாமில் மீண்டும் பா.ஜ., வெற்றி; மேற்கு வங்கத்திலோ மம்தா பானர்ஜிக்கு படுதோல்வியை கொடுத்து, அவரது கட்சியே இப்போது உடைந்து விட்டது. இப்படி, தான் எடுத்த வேலையை பா.ஜ.,வின் வெற்றியாக மாற்றியவர் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா.

இவரது அடுத்த இலக்கு பஞ்சாப். இங்கு, ஆம் ஆத்மியின் பகவந்த் மான் முதல்வராக உள்ளார். பயங்கர குடிகாரர் என, இவர் மீது பலத்த குற்றச்சாட்டு உண்டு. அத்துடன் சட்ட சபைக்கும் குடித்து விட்டுத்தான் வருகிறார் என, எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன.

வரும் 2027 பிப்ரவரி அல்லது மார்ச்சில், பஞ்சாபில் சட்டசபை தேர்தல் நடக்கிறது. 2022ல் நடந்த தேர்தலில், பஞ்சாப் லோக் காங்கிரஸ், சிரோமணி அகாலிதளம் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டி யிட்ட பா.ஜ., தோல்வி அடை ந்தது. இம்முறை 117 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட பா.ஜ., முடிவெடுத்துள்ளது. மத்திய இணை அமைச்சராக உள்ள, பஞ்சாபைச் சேர்ந்த ரவ்நீத் சிங் பிட்டு என்பவரை, முதல்வர் வேட்பாளராக களமிறக்க அமித் ஷா முடிவெடுத்துள்ளாராம். தற்போது, ராஜ்யசபா எம்.பி.,யாக உள்ள பிட்டுவின் பதவிக்காலம் இம்மாதம் முடிவடைகிறது. முதல்வர் வேட்பாளராக அறிவிக்க இருப்பதால், இவருக்கு மீண்டும் ராஜ்யசபா பதவி வழங்கப்படவில்லை.

பிட்டுவின் குடும்பம் பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வருகிறது. காங்கிரசைச் சேர்ந்த இவரது தாத்தா பியண்ட் சிங், பஞ்சாப் முதல்வராக பதவி வகித்தார். காலிஸ்தான் தீவிரவாதிகளால், 1995ல் படுகொலை செய்யப்பட்டார். டில்லியை கெஜ்ரிவாலிடமிருந்து பறித்தது போல, பஞ்சாபிலும் பா.ஜ.,வின் வெற்றிக்காக களமிறங்கியுள்ளார் அமித் ஷா. ஆனால், தமிழகத்தில் தான் அமித் ஷாவின், 'மேஜிக்' வேலை செய்யவில்லை.

# பா.ம.க.,வுடன் விஜய் திடீர் நெருக்கம்!




சென்னை, ஜூன். 21–

பா.ம.க.,வுடன் முதல்வர் விஜய் திடீர் நெருக்கம் காட்டுவதற்கு, த.வெ.க., அரசுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தரும் குடைச்சல்களே காரணம் என்று கூறப்படுகிறது. தி.மு.க., கூட்டணியில் போட்டியிட்டு வென்ற காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள், த.வெ.க., அரசுக்கு ஆதரவு அளித்துள்ளன. இதில், காங்கிரசும், முஸ்லிம் லீக்கும், த.வெ.க.,வுடன் மிகவும் இணக்கமாக இருந்து வருகின்றன.

தலையீடு ஆனால், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும், வி.சி.க.,வும் பல்வேறு பிரச்னைகளில், த.வெ.க., அரசை நேரடியாகவே விமர்சித்து வருகின்றன. அரசு நிர்வாகம், அதிகாரிகள் மாற்றம் உள்ளிட்ட விவகாரங்களில், வி.சி.க.,வின் தலையீடு அதிகம் இருப்பதாக கூறப்படுகிறது.

இதுபோன்ற நெருக்கடியையும், குடைச்சல்களையும் தவிர்க்கவே, அ.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களுக்கு வலை விரிக்கப்பட்டது. அதில், இதுவரை ஐந்து பேர் தங்கள் பதவியை ராஜினாமா செய்துள்ளனர்; நான்கு பேர் த.வெ.க.,வில் சேர்ந்து விட்டனர். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள விடுதலை சிறுத்தைகள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள், 'குதிரை பேரம்' என்றும் எதிர்க்கட்சிகளை போன்றே விமர்சித்து உள்ளன.

இது, முதல்வர் விஜய்க்கும், த.வெ.க.,வுக்கும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. 'அமைச்சரவையில் இருந்து எப்போது வேண்டுமானாலும் வெளியேறுவோம்' என, வி.சி.க., தலைவர் திருமாவளவன் கூறியதும், த.வெ.க.,வுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# அ.தி.மு.க., கூடாரம் மதுரையில் காலியாகிறது!



மதுரை, ஜூன். 21–

மதுரையை சேர்ந்த டாக்டர் சரவணன், குமார் ஆகியோர் அ.தி.மு.க.,வில் இருந்து விலகி, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர். நகர் செயலர் செல்லூர் ராஜூவின் தீவிர ஆதரவாளரான எம்.எஸ். பாண்டியன், கிருஷ்ணன் ஆகியோர் அக்கட்சியில் நேற்று இணைந்தனர்.

செல்லூர் ராஜூவும் இணைவார் என, சில வாரங்களாகவே பேச்சு எழுந்தது. அதை மறுத்துள்ள ராஜூ, 'நான் என்றும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் தான்' என, தெரிவித்தார்.

அ.தி.மு.க.,வினர் தொடர்ந்து த.வெ.க.,வில் இணைந்து வருவதால், மதுரையில் அ.தி.மு.க., கூடாரம் காலியாகிறது. உள்ளாட்சி தேர்தலை கணக்கிட்டு சேர்ந்து வருவதால், கட்சிக்காக ரசிகர் மன்றத்தில் இருந்தே உழைத்து வரும் த.வெ.க., நிர்வாகிகள் தலைமை மீது கோபத்தில் உள்ளனர்.

அவர்கள் கூறுகையில், 'மதுரை, தேனி மாவட்ட பொறுப்பாளரான அமைச்சர் நிர்மல்குமாருக்கு தரப்பட்ட, 'அசைன்மென்ட்' படி அ.தி.மு.க.,வினர் சேர்ந்து வருகின்றனர். நிர்மல்குமாரே பா.ஜ., –– அ.தி.மு.க.,வில் இருந்து வந்தவர் தான். நேரடியாக விஜய் பார்வையில் உள்ளதால், உள்ளூர் கட்சி நிர்வாகிகளை கண்டும், காணாமலும் உள்ளார். 'அ.தி.மு.க.,வினருக்கு பதவி வழங்குவதாக உறுதி அளிக்கப்படுவதால், எங்களுக்கு தான் சிக்கல்' என்றனர்.


# வேலை வாய்ப்பு

## "AIIMS–ல் கொட்டிக்கிடக்கும் 2600 வேலைவாய்ப்புகள்..!




நிறுவனத்தின் பெயர்: AIIMS அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (All India Institutes of Medical Sciences)
அறிவிப்பு எண்: 93/2026 (தேதி: 13/06/2026)
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி முறை: நிரந்தரப் பணி
தேர்வின் பெயர்: பொது ஆட்சேர்ப்புத் தேர்வு 5 (CRE–5)
மொத்தக் காலிப்பணியிடங்கள்: 2668 (குரூப் B மற்றும் C பதவிகள்)
பணிபுரியும் இடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 13.06.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 03.07.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://AIIMSexams.ac.in/

# முன்பதிவு டிக்கெட் இல்லாமல் பயணித்தால் ரூ.2,000 அபராதம்!



சென்னை, ஜூன். 21–

ரயில்வே சட்டப்படி, விதிமீறல்களுக்கு விதிக்கப்படும் அபராத தொகை, 500 ரூபாயில் இருந்து அதிகபட்ச மாக, 5,000 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, ரயில் நிலையங்களில் அனுமதியின்றி பொருட்கள் விற்பனை செய்தால், 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

செலுத்த மறுத்தால், நீதிமன்றம் வாயிலாக, 5,000 ரூபாய் வரை அபராதம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் அனுமதியின்றி பயணித்தால், 2,000 ரூபாய்; பெண்களுக்கான பெட்டிகளில் ஆண்கள் பயணித்தால், 2,500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

மேலும், ரயிலில் புகைபிடித்தால், 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இந்த புதிய விதிமுறைகள், வரும் 1ம் தேதி முதல் அமலாகும் என, ரயில்வே அறிவித்துள்ளது.

# பக்தர்களுக்கு விரைவாக தரிசனம் கிடைக்க ஏ.ஐ., மென்பொருள்..?




சென்னை, ஜூன். 21–

தமிழக கோவில்களில் தரிசனத்திற்கு டிக்கெட் எடுக்க தாமதம் ஏற்படுவதை தவிர்க்கவும், கோவிலின் தனிச்சிறப்புகளை தெரிந்து, அதற்கு ஏற்ப சேவைகளை பெறவும், சமீபத்திய ஏ.ஐ., தொழில்நுட்பத்தில் மென்பொ ருளை உருவாக்குமாறு, அறநிலைய துறைக்கு, பக்தர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

தமிழகத்தில் ஹிந்து சமய அறநிலைய துறை கட்டுப்பாட்டில் 43,728 கோவில்கள் உள்ளன.கோவில்களில் பக்தர்கள் தரிசன டிக்கெட் பெறுவது உள்ளிட்ட வழிபடுவோரு க்கான சேவை தகவல் உள்ளிட்ட விபரங்களுக்காக, ஐ.டி.எம்.எஸ்., அதாவது ஒருங்கிணைக்கப்பட்ட கோவில்கள் மேலாண்மை திட்ட மென்பொருளை, என்.ஐ.சி., எனப்படும் தேசிய தகவல் மையம் வாயிலாக, அறநிலைய துறை உருவாக்கி உள்ளது.

பல கோவில்களில் தரிசன டிக்கெட் எடுக்கும்போது, 'சர்வர்' இணையதள இணைப்பு சரிவர கிடைப்பதில்லை. இதனால், டிக்கெட் எடுக்க தாமதம் ஆவதால், பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது. குறிப்பாக முதியவர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, சமீபத்திய ஏ.ஐ., தொழில்நுட்பத்திற்கு ஏற்ப, புதிய மென்பொருளை உருவாக்குமாறு, அறநிலைய துறைக்கு, பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# வருங்கால கட்டமைப்புக்கு சுயசார்பு மிக அவசியம்: பிரதமர் மோடி பேச்சு!



கொல்கத்தா, ஜூன். 21–

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் 12–வது ஆண்டாக இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி பிரதமர் மோடி தலைமையில் கொல்கத்தாவில் யோகா பயிற்சி நடைபெற்றது. இதில் யோகா பயிற்சி நிறுவனங்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் உள்பட 35 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

இதனை முன்னிட்டு மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவர் பேசும்போது, புதிய கடல்சார் சகாப்தத்தில் மேற்கு வங்காளம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும். துறைமுகங்கள், தொழிற்சாலைகள், திறன்கள், கடல்சார் பொருளாதாரம் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லப்படுவது என அவற்றிற்கான ஆற்றலை அது கொண்டுள்ளது.

வருங்காலத்தில் இந்தியாவின் நீல பொருளாதாரம், கடல்சார் உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் கடலோர வளர்ச்சிக்கான முக்கிய மையங்களில் ஒன்றாக மேற்கு வங்காளம் திகழும்.

ஆனால், அமைதியை பாதுகாக்க வலிமையும் சம அளவில் அவசியம் என இந்தியா அறிந்திருக்கிறது. வளங்களை பாதுகாப்பதற்கு வீரர்களும், வருங்கால கட்டமைப்புக்கு சுயசார்பும் மிக அவசியம்.

இந்திய கடற்படையில் ஐ.என்.எஸ். ஆகிரே, ஐ.என்.எஸ். துனாகிரி மற்றும் ஐ.என்.எஸ். சான்ஷோதக் ஆகியவை இன்று இணைக்கப்பட்டு உள்ள நிகழ்வு, அந்த ஆற்றலுக்கான அடையாளங்களாக காணப்படுகின்றன என்று கூறினார்.

அவை, 21–ம் நூற்றாண்டில் தன்னுடைய ஆற்றலை அங்கீகரிக்கும் வகையிலான, தன்னுடைய திறனில் நம்பிக்கை கொண்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும், மனவுறுதியுடனும், வேகம், ஆற்றல் மற்றும் தீர்க்கத்துடன் நிலையாக முன்னேறி கொண்டிருக்கும் இந்தி யாவை அடையாளப்படுத்து கின்றன என்று அவர் கூறியுள்ளார்.

# லெபனான் மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்.. ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடிய ஈரான்!



வாஷிங்டன், ஜூன். 21–

அமெரிக்கா – ஈரான் இடையே நேற்று முன் தினம் (ஜூன் 19) அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் ஒரு பகுதியாக உலக எண்ணெய், எரிவாயு ஏற்றுமதிக்கு முக்கிய கடல்வழிப்பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறத்தது.

கடந்த பிப்ரவரி 28 முதல் நடந்து வந்த போருக்கு நீண்ட இழுபறிக்கு பின் தீர்வு காணப்பட்டுள்ள சூழலில் இஸ்ரேலின் நடவடிக்கை நிலைமையை மீண்டும் மோசமாகியுள்ளது.

லெபனானுடன் போர் நிறுத்தம் இருந்தபோதும் இஸ்ரேல் அந்நாடு மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. தொடக்கம் முதல் இதை ஈரான் கண்டித்து வந்தது. அதிகாலை முதல் நடத்தப்பட்ட தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட 32க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை கண்டித்து ஈரான் மீண்டும் ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் தாங்கள் செய்து கொண்ட தற்காலிக அமைதி ஒப்பந்தத்தை அமெரிக்காவும் அதன் கூட்டாளியான இஸ்ரேலும் திட்டமிட்டு மீறிவிட்டதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரானின் ராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தற்போதைய போர்ச் சூழலை ஆய்வு செய்த பிறகு, ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் முழுமையாக மூட முடிவு செய்துள்ளோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள விதிகளை எதிரி தரப்பு மீறிவிட்டது. அவர்களின் இந்த ஆக்கிரமிப்பு மற்றும் பிரகோபனமான நடவடிக்கைகள் தொடர்ந்தால், இதைவிடக் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை ஈரான் எடுக்கும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சி விவாதங்கள் இருட்டடிப்பு: சபாநாயகருக்கு உதயநிதி கடிதம்!



சென்னை, ஜூன். 21–

சட்டசபை நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என, முதல்வர் விஜய் அளித்த வாக்குறுதிக்கு மாறாக, தற்போது நடந்து வரும் கவர்னர் உரை மீதான விவாதம், நேரலை செய்யப்படுவதில்லை.

மேகதாது அணை கட்டுவதை கண்டித்து, கடந்த 19ம் தேதி, முதல்வர் கொண்டு வந்த அரசின் தீர்மானத்தின் மீதான விவாதங்கள், நேரலை செய்யப்பட்டன. அதன் பின், உடனடியாக இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

கவர்னர் உரை மீதான விவாதம் தொடங்கிய நிலையில், அது இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரின் விவாதங்கள் முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டு, ஆளும் கட்சியினருக்கு வேண்டிய விவாத காட்சிகள் மட்டும், ‘எடிட்’ செய்யப்பட்டு, மாலையில் வெளியிடப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகளின் பேச்சை மறைப்பது, மக்களையே அவமானப்படுத்துவதாகும்; சட்டசபை மாண்பை குலைப்பதாகும்.

மேலும், ஊடகங்களுக்கு செய்திகளை வழங்க மறுப்பதும், அரைகுறை செய்திகளை அளிப்பதும், ‘நாங்கள் தருவதை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும்’ என சொல்வதும், பாசிச நடவடிக்கை. சட்டசபை, மக்கள் பிரதிநிதிகள், ஊடகங்கள் ஆகிய அனைத்தையும் ஒரே நேரத்தில் அவமானப்படுத்தும் செயல் நடந்துள்ளது. சட்டசபை நடவடிக்கைகளை நேரலை செய்ய, தங்களுக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடில், மக்கள் அளித்த ஓட்டுக்கே மரியாதை இன்றி போய் விடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரசியல் உள்நோக்கம் கொண்டவை; பாகிஸ்தான் அதிபருக்கு இந்தியா கடும் கண்டனம்!



புதுடில்லி, ஜூன். 21–

இந்தியாவில் சிறுபான்மையினர் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் நடத்தப்படும் விதம் குறித்து பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி தெரிவித்த கருத்துக்களுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாகிஸ்தான் அதிபர் தெரிவித்த ஆதாரமற்ற கருத்துக்களை இந்தியா திட்டவட்டமாக நிராகரிக்கிறது. எப்படியாயினும், இந்தியாவின் உள்விஷயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்க அவருக்கு எந்த உரிமையும் இல்லை. உலகளாவிய விவாதத்திற்குரிய நாடாக விளங்கும் பாகிஸ்தான், மனித உரிமைகள் விஷயத்தில் மோசமான வரலாற்றை கொண்டு இருக்கும் போது, இந்தக் கருத்துக்கள் குறிப்பாக அபத்தமானவை. பல்வேறு மதங்களைச் சேர்ந்த சிறுபான்மையினரைத் திட்டமிட்டுக் குறிவைத்து, அவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் பாகிஸ்தானின் நீண்டகால வரலாறு மிகவும் பெயர்போனதாகும்.

இந்த யதார்த்தத்தைக் கருத்தில் கொள்ளும்போது, அதிபரின் கருத்துக்கள், பாகிஸ்தானின் மதவெறி மற்றும் வெறுப்பு நிறைந்த தேசியக் கொள்கைகளால் தூண்டப்பட்ட ஒரு அரசியல் உள்நோக்கம் கொண்டவை. இவ்வாறு ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.



இந்து சமத்துவ கட்சி நிறுவனத் தலைவர் உழைப்பாளி பூபாலு தலைமையில் அவிநாசி வட்டம் பெருமாநல்லூரில் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியான தியாகச் செம்மல்கள் அமைந்திருக்கும் விவசாய நினைவு ஸ்தூபியில் விவசாயிகளுக்கு புஷ்ப அஞ்சலி மற்றும் வீரவணக்கம் செலுத்தப்பட்டது இதில் மாநில பொதுச் செயலாளர் அ. செல்வம் மாநிலச் செயலாளர் மா. சிவா.மேற்கு மாவட்ட தலைவர் ரே பாலா .தமிழக இந்து மக்கள் இயக்கத்தின் தலைவர் ப. குமரேசன் மாநிலச் செயலாளர் ரமேஷ் மாநில ஐடி வின்ங் செயலாளர் நா. நரசிங்கம் மகளிர் அணி தலைவி சுந்தரி மற்றும் துணைத் தலைவி பிரீத்தி மற்றும் ஏராளமான பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# 2-வது நாளாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம்!



புதுடெல்லி, ஜூன். 21–

சி.பி.எஸ்.இ. விடைத்தாள் டிஜிட்டல் மதிப்பீடு குளறுபடிகள் மற்றும் நீட் வினாத்தாள் கசிவு போன்றவற்றுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.கடந்த 6–ந்தேதி அவர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் ஒன்றுகூடி போராட்டம் நடத்தினர். மேலும் 20–ந் தேதிக்குள் கல்வி மந்திரி பதவி விலகாவிட்டால் மீண்டும் போராட்டம் நடத்துவோம் என அந்த கட்சியின் நிறுவனர் அபிஜீத் தீப்கே அறிவித்திருந்தார்.இதன்படி டெல்லி ஜந்தர் மந்தர் ரோட்டில் நேற்று மீண்டும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் பங்கேற்க டெல்லி மட்டுமல்லாது பல்வேறு மாநிலங்களில் இருந்தும் மாணவர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.கட்சி நிறுவனர் அழைப்பை ஏற்று அவர்கள் எவர்சில்வர் தட்டு மற்றும் கரண்டி எடுத்து வந்து அவற்றின் மூலம் ஒலி எழுப்பி கோஷம் போட்டனர். பலர் கரப்பான் பூச்சி முகமூடிகளை அணிந்திருந்தனர்.

இந்த போராட்டத்தில் பகலில் கூட்டம் அதிகமாக இருந்தது. நேரம் செல்லச் செல்ல கூட்டம் குறைந்தது. இதற்கிடையே மாலை 6 மணி அளவில் போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு போலீசார் அறிவுறுத்தினர். சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி மாலை 5 மணிக்கு பிறகு போராட்டம் நடத்தக்கூடாது என்றனர். ஆனால் போராட்டக்காரர்கள் கலையவில்லை. மந்திரி பதவி விலகும் வரை அங்கிருந்து வெளியே செல்லப்போவது இல்லை என்றனர். இப்படியே நேரம் நீண்டு கொண்டே இருந்தது. இருட்டான பிறகும் அவர்கள் வெளியேறவில்லை. அங்கு இருட்டாக இருந்ததால் போராட்டக்காரர்கள் மின் விளக்கு வசதி செய்து தருமாறு போலீசாரிடம் கேட்டனர்.

நீண்ட நேர முறையீட்டுக்கு பிறகு மின் விளக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரவிலும் போராட்டம் நடைபெற்றது. விடிய விடிய போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று இரவு முதல் போராட்ட களத்தில் உள்ள கழிவறைகளுக்கான தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியை சேர்ந்த அபிஜித் திப்கே குற்றம்சாட்டியுள்ளார். தங்களின் கோரிக்கை நிறைவேறும் வரை இந்த அறப்போராட்டம் ஓயாது என்றும் போராட்டக்காரர்கள் உறுதியுடன் தெரிவித்துள்ளனர். 2–வது நாளாக ஜந்தர் மந்திரில் போராட்டம் நடைபெற்று வருவதால் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# இந்து சமத்துவ கட்சி சார்பில் பெருமாநல்லூர் விவசாயிகளின் நினைவு நாள் அனுசரிப்பு!



திருப்பூர், ஜூன் 21–

இந்து சமத்துவ கட்சி நிறுவனத் தலைவர் உழைப்பாளி பூபாலு அவர்கள் தலைமையில் அவிநாசி வட்டம் பெருமாநல்லூரில் 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியான தியாகச் செம்மல்கள் அமைந்திருக்கும் விவசாய நினைவு ஸ்தூபியில் விவசாயிகளுக்கு புஷ்ப அஞ்சலி மற்றும் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இதில் மாநில பொதுச் செயலாளர் அ. செல்வம் மாநிலச் செயலாளர் மா. சிவா.மேற்கு மாவட்ட தலைவர் ரே பாலா .தமிழக இந்து மக்கள் இயக்கத்தின் தலைவர் ப. குமரேசன் மாநிலச் செயலாளர் ரமேஷ் மாநில ஐடி வின்ங் செயலாளர் நா. நரசிங்கம் மகளிர் அணி தலைவி சுந்தரி மற்றும் துணைத் தலைவி பிரீத்தி மற்றும் ஏராளமான பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# தங்கம் விலை உயர்வு!



சென்னை, ஜூன். 21–

சென்னையில் தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.240 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,08,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.30 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையைப் பொறுத்த வரையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் குதூகல குளியல்!



தென்காசி, ஜூன். 21–

குற்றாலத்துக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கேரளத்தில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வரும் நிலையில், தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் குற்றாலத்தில் தற்போது குளுகுளு சீசன் நிலவுகிறது.

வார விடுமுறை தினம் என்பதால், குற்றாலத்துக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது சீசன் களைகட்டிய நிலையில் மெயின் அருவியில் குளிக்க 3 மாதங்களுக்கு பிறகு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குற்றாலத்தில் சில தினங்களாக மழை பெய்யாத நிலையில், மெயின் அருவி, ஐந்தருவி உட்பட அனைத்து அருவிகளிலும் குறைவாக தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. எனினும் சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020